

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும் 363ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் செயல்படுத்துவது குறித்து குறுக்குச்சாலை,சந்திரகிரி உள்ளிட்ட ஊர்களில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர், கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். உடன் தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி,ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், எப்போதும் வென்றான் சோலைசாமி, திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் முத்துக்குமார், வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் முத்துராஜ், வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ்பாண்டியன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–1க்கு உட்பட்ட 5வது வார்டுக்கு இ. கருணாநிதி எம்.எல்.ஏ நேரில் சென்று அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் மழைநீர் கால்வாய் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை தரமாகவும் விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் அப்பொழுது மாநகராட்சி உதவி ஆணையர் சொர்ணலதா உதவி செயற்பொறியாளர் சத்தியசீலன் வட்ட கழக செயலாளர் தமிழ்குமரன் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# கொளத்தூரில் பெரியார் நகர் நூலகம் - முதல்வர் படைப்பகம் திறப்பு!

## மாணவர்களுக்கு மேலும் அரிய வாய்ப்பு!

சென்னை, நவ.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) கொளத்தூர், பெரியார் நகரில் 5.24 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட பெரியார் நகர் நூலகம் மற்றும் முதல்வர் படைப்பகம் திறந்து வைத்தார்.

**மாணவர்களுக்கு மேலும் அரிய வாய்ப்பு**

சென்னை, கொளத்தூர் தொகுதியில் பெரியார் நகர் முழுநேர கிளை நூலகம், ஜவஹர் நகர் முழு நேர கிளை நூலகம், பேப்பர் மில்ஸ் சாலை கிளை நூலகம், சீனிவாச நகர் (கொளத்தூர்) கிளை நூலகம், கபிலர் தெரு கிளை நூலகம், மதுரைப்பிள்ளை தெரு கிளை நூலகம் மற்றும் கொளத்தூர் பகுதி நேர நூலகம், என மொத்தம் ஏழு நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஏழு நூலகங்களில் 28,121 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளதோடு, சுமார் 3,31,830 நூல்களும் உள்ளன. இதில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள், பொதுமக்கள் இந்நூலகத்தை பயன் பெற்று வருகிறார்கள்.

பெரியார் நகர் வட்டார நூலகத்தில் 17,886 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்நூலகத்தில் தினசரி நாளிதழ் பிரிவு, இரவல் பிரிவு, சிறுவர்கள் பிரிவு, மகளிர் பிரிவு மற்றும் குறிப்புதவி நூல்கள் பிரிவு ஆகியவை அமைந்துள்ளது. இதில் 70,000 புத்தகங்கள் உள்ளது. மொத்த புரவலர்கள் 496 பேர் உள்ளனர்.

**புதுப்பிக்கப்பட்ட பெரியார் நகர் நூலகம் மற்றும் முதல்வர் படைப்பகம்**

கொளத்தூர், பெரியார் நகர் நூலகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 5.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

இப்புதுப்பிக்கப்பட்ட முதல்வர் படைப்பகம், தரைத்தளம் மற்றும் முதல் தளத்தைக் கொண்ட குளிரூட்டப்பட்ட நவீன படைப்பகமாக அமைக்கப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் 75 இருக்கைகளுடன் கூடிய நூலகம், முதல் தளத்தில் 85 இருக்கைகள் கொண்ட கற்றல் மையம் மற்றும் 60 இருக்கைகள் கொண்ட பயிற்சிக் கூடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்நூலகத்தில், தமிழ்நாடு பாடநூல் கழக புத்தகங்கள், தமிழ் இலக்கியம், கவிதை, கட்டுரை, அறிஞர்களின் வரிசையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது நூல்கள், ஆங்கில புத்தகங்கள், பல தலைவர்களின் வாழ்க்கை வரலாறு நூல்கள், மருத்துவ நூல்கள் மற்றும் போட்டித் தேர்வு மாணவர்களுக்கான TNPSC & UPSC புத்தகங்கள் மற்றும் குழந்தைகளுக்கென்று 4000 நூல்கள், என சுமார் 70.000 புத்தகங்களுடன் கூடிய நூலக வசதி, மின் வழி கற்றல் (ELEARNING), இலவச இணையதள இணைப்பு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சிற்றுண்டியகம், கழிப்பறைகள் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும், மாணவர்கள், போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மேலும் மாணவச் செல்வங்கள் பயன்பெறும் வகையில், போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டல் மற்றும் தீவிரப் பயிற்சிகளை வழங்குவதற்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் இயங்கிவரும், அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையமும் இணைந்து, இளைஞர்களுக்கு திசைகாட்டும் மாபெரும் திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ், இந்திய குடிமைப் பணி தேர்வுகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளுக்கு சிறந்த பயிற்றுநர்கள் மூலமாக சிறப்பான பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு படிக்கின்ற மாணவர்கள் இங்கு வருகின்ற காரணத்தால், அவர்களுக்குள் கலந்துரையாடல் செய்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமைகிறது. இந்த அரிய வாய்ப்பினை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உயர்கல்வி பயிலும் மாணவியர்களுக்கு புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம், இளைஞர்களின் திறனை மேம்படுத்திட நான் முதல்வன் திட்டம் என கல்வித் துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி பெரும்புரட்சியை செய்து வருகிறார். திராவிடமாடல் அரசு மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்திட தனிக்கவனம் செலுத்தி, நூலகங்கள், படிப்பகங்களை உருவாக்கி இந்தியாவிற்கே கல்வியில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 114 வட்டத்தில் B.L.A.2 கூட்டம் வட்ட செயலாளர் கே.கோபி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.எச்.ரகமத்துல்லா முன்னிலை வகித்தார். உடன் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# ஆசிரியர் தகுதித் தேர்வு இன்று தொடக்கம்: 4.80 லட்சம் ஆசிரியர்கள் எழுதுகின்றனர்!

சென்னை, நவ.15-

பள்ளிகளில் ஒன்று முதல் 8ம் வகுப்பு வரை பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும் டெட் எனப்படும் ஆசிரியர் தகுதித்தேர்வு தேர்ச்சி கட்டாயம். டெட் தேர்வில் தாள்1 இடை நிலை ஆசிரியர்களுக்கும், தாள் 2 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் நடத்தப்படுகிறது. டெட் தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தி வருகிறது.

தமிழகத்தில் 2025ம் ஆண்டு டெட் தேர்வுக்கான அறிவிப்பை ஆசிரியர் தேர்வு வாரியம் கடந்த ஆக.11ம் தேதி வெளியிட்டது. இந்நிலையில், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு டெட் தேர்வு இன்று (நவ.15) தொடங்குகிறது.

முதல் நாளில் டெட் தாள் 1 தேர்வும், 2வது நாளான ஞாயிற்றுக்கிழமை தாள் 2ம் நடைபெற உள்ளன. தாள்1 தேர்வில் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 370 பேர், தாள்2ல் 3 லட்சத்து 73 ஆயிரத்து 438 பேர் என மொத்தம் 4 லட்சத்து 80 ஆயிரத்து 808 பேர் கலந்து கொள்கின்றனர். தாள்1க்கு 367 தேர்வு மையங்களும், தாள்2க்கு 1,241 தேர்வு மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# வட சென்னை நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.64 லட்சம் மதிப்புள்ள திட்டப் பணிகள்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. தொடங்கி வைக்கிறார்!

சென்னை, நவ.15-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் ரூபாய். 64 லட்சங்கள் செலவில் சாலையோர பூங்கா, உடற்பயிற்சி கூடம் உள்ளிட்ட முடிவுற்ற பணிகளை சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., ஆர்.கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர், ஆகியோர் முன்னிலையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி இன்று (15.11.2025) காலை 10 மணிக்கு மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கவுள்ளார்.

**நிகழ்ச்சியின் விவரங்கள்**

காலை 10 மணிக்கு ஆர்.கே நகர் சட்டமன்றத் தொகுதி வார்டு 47க்கு உட்பட்ட பாரதி நகர் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் ரூபாய். 25 லட்சங்கள் மதிப்பீட்டில் உடற்பயிற்சிக் கூடம் திறந்து வைத்தல்.

காலை 10.15 மணிக்கு ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி வார்டு 43க்கு உட்பட்ட காலரா மருத்துவமனை வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் ரூபாய். 15 லட்சங்கள் மதிப்பீட்டில் திறந்த வெளி உடற்பயிற்சிக் கூடம் திறந்து வைத்தல்.

காலை 10.30 மணிக்கு ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி வார்டு 40க்கு உட்பட்ட வ.ஊ.சி நகரில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் ரூபாய். 24 லட்சங்கள் மதிப்பீட்டில் சாலையோர பூங்கா திறந்து வைத்தல்.

இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ். ஜெபதாஸ் பாண்டியன், இரா. லட்சுமணன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி., வட்டக் கழகச் செயலாளர்கள் ஏழுமலை, ராஜா, நாகராஜன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. மணிமேகலை, திருமதி. பவித்ர, திருமதி. குமாரி, மற்றும் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் மற்றும் ஊடகவியாளர்கள் பங்கேற்குமாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் கிழக்கு பகுதி 49 வட்ட பாகமுகவர்கள் BCA2 – BDA – BYA கூட்டம் வட்டகழக பொறுப்பாளர்க கலைசெல்வன் ஏற்பாட்டில் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் கு.சுந்தர், எல்.சீனிவாசன் முன்னிலையில் வட்டஅவைத் தலைவர் எம்.பழனி தலைமையில் நடைபெற்றது தேர்தல் பொறுப்பாளர் டாக்டர் அ.சுபேர்கான் கலந்துகொண்டு SIR சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணி குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### வட்டப் பொறுப்பாளர் கலைச் செல்வன் ஏற்பாட்டில்

# இராயபுரம் 49வது வட்டத்தில் பாக முகவர்கள் கூட்டம்!

## இரா.செந்தில்குமார் – டாக்டர் அ.சுபேர்கான் பங்கேற்பு!

சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் கிழக்கு பகுதி 49 வட்ட பாக முகவர்கள் BCA2- BDA - BYA - கூட்டம் திப்பனம்பட்டி திருமண மண்டபத்தில் வட்டகழக பொறுப்பாளர்க கலைசெல்வன் ஏற்பாட்டில் ராயபுரம் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார், பகுதி துணைச் செயலாளர் கு.சுந்தர், மாவட்ட பிரதி எல்.சீனிவாசன் முன்னிலையில், வட்டஅவைத் தலைவர் எம்.பழனி தலைமையில் நடைபெற்றது.

தேர்தல் பொறுப்பாளர் டாக்டர் அ.சுபேர்கான் கலந்துகொண்டு SIR சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணி குறித்து ஆலோசனை வழங்கி பேசினார்.

உடன் வட்ட கழக நிர்வாகிகள் எம்.வி.நரசுமணி அ.குமார் கே.ஆர்.கோபிநாத், ஜி.கோதண்டன், நரு. பன்னீர்செல்வம், ப.சுதாகர், ஏ.கதிரவன், கே.பாஸ்கர், சி.லிங்கேசன், சி. மனோகரன், எல்.கிருஷ்ணா, ஹரிஹரன், எம்.மோகன், பாக முகவர்கள் கே.பாரத், விக்ரம், மோகனசுந்தரம், எஸ். பாரதி, ரேவதி, தினேஷ் குமார், மு.கன்னியப்பன், வி.கலைச்செல்வன், ப.நிதீஷ் குமார், கே.பாலகிருஷ்ணன், எம்.தங்கராஜ், எஸ்.சங்கர், ஜி.விநாயகமூர்த்தி, அ.அரசு, வி.சின்னசாமி, கிருபாகரன், சி.ஏ.மகேஷ் குமார், சரவணன், பிரசன்னா, பிரசாந்த், பவித்ரன், ஜெகதீஷ், லோகேஷ், மணிகண்டன், ஜோஸ்வா, சோலை மிதிலேஷ், விஷ்ணு, யோகேஸ்வரன், ஸ்ரீதர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை டி. சுந்தரம்
### நவம்பர் 15 (2012)



புதுக்கோட்டை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 25 ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகத் துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராக தொடர்ந்து 25 ஆண்டுகளாக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுக்கோட்டை அர்பன் கூட்டுறவுப் பண்டகச் சாலையில் தொடர்ந்து இயக்குநராகவும் – ஒருமுறை துணைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.


கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"உழைப்பும், தியாகமும், நேர்மையும் இருந்தால் மட்டுமே உள்ளூரில் தொடர்ந்து நகர்மன்ற உறுப்பினராக வரமுடியும் என்பதை நிருபித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெங்கிடங்கால் சந்தானம்
### நவம்பர் 15 (2005)



நாகை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.

நெருக்கடி நிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

1967ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது தலைவர் கலைஞர்மீது மாற்றுக் கட்சியினர் தாக்குதல் நடத்தியபோது கலைஞரை உடனிருந்து பாதுகாத்தவர்களில் இவரும் ஒருவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**